# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்

## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

27.09.2019–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

பொருட்கள்

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

089. வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையம் கடைகள் 11 எண்ணிக்கை கடை குத்தகைதாரர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்வரும் விவரப்படி வந்தவாசி நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தனர்

| வ.எண். | கடைகள் எண். | வழக்கு தொடர்ந்த குத்தகைதாரர் பெயர்விவரம் | வழக்கு எண். | வழக்கு கட்டணம் ரூபாய். |
|---|---|---|---|---|
| 1 | 30 | திரு.V.சுந்தரம் | W.P. 2888/2012 | ரூ.40,000 . 00 |
| 2 | 29 | திரு.R.கோவிந்தன் | W.P. 2889/2012 | ரூ.40,000 . 00 |
| 3 | 06 | திருமதி.P.சுசீலா | W.P. 2890/2012 | ரூ.40,000 . 00 |
| 4 | 32 | திருமதி.நளினி | W.P. 2891/2012 | ரூ.40,000 . 00 |
| 5 | 28 | திரு.M.சிவசங்கரன் | W.P. 2892/2012 | ரூ.40,000 . 00 |
| 6 | 22 | திரு.R.கிருஷ்ணசாமி | W.P. 2893/2012 | ரூ.40,000 . 00 |
| 7 | 01 | திரு.M.சிவசங்கரன் | W.P. 2894/2012 | ரூ.40,000 . 00 |
| 8 | 23 | திரு.R.கிருஷ்ணசாமி | W.P. 2895/2012 | ரூ.40,000 . 00 |
| 9 | 25 | திருமதி.நளினி | W.P. 2896/2012 | ரூ.40,000 . 00 |
| 10 | 07 | திரு.S.காலேசா | W.P. 2897/2012 | ரூ.40,000 . 00 |
| 11 | 03 | திரு.A.M.காஜாஷெரீப் | W.P. 2898/2012 | ரூ.40,000 . 00 |

மேற்கண்ட பேருந்து நிலைய கடைகள் 11 எண்ணிக்கை கடைகளின் குத்தகைதாரர்கள் நகராட்சிக்கு எதிராக தொடர்ந்த வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றம் உத்திரவு USR No.12848 to 12858 of 2018 மற்றும் SRNO.51523 to 51533 நாள் 30.07.2018ன்படி மேற்கண்ட நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட 11 எண்ணிக்கை வழங்குமாறும் தள்ளுபடி செய்யப்பட்டு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடைகளின் வழக்கு கட்டணம் மேற்கண்ட விபரத்தில் கண்டவாறு வழக்கு 1–க்கு ரூ.40,000/– வீதம் 11 வழக்குகளுக்கான வழக்கு கட்டணம் ரூ.40,000 x11= ரூ.4,40,000/– வழங்கக்கேட்டு சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.O.செல்வம், M.A.MPI - BL அவர்களிடமிருந்து வழக்குகட்டணம் ரூ.4,40,000/– கோரும் பட்டியல் வரப்பட்டுள்ளது.

மேற்கண்ட புதிய பேருந்து நிலையம் 11 எண்ணிக்கை கடைகளின் வழக்கு கட்டணம் ரூ.4,40,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.புதிய பேருந்து நிலையம் கடைகள் 11 எண்ணிக்கை குத்தகைதாரர்கள் 2012ம் ஆண்டு நகராட்சி மீது வழக்கு தொடர்ந்தது கடைகளின் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளதின் பேரில் 11 எண்ணிக்கை கடைகளையும் குத்தகை மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் நகராட்சிக்கு போதிய நிதிகிடைக்கும் என்பதை கருத்தில் கொண்டு நகராட்சிக்கு வருவாய் அபிவிருத்தி ஏற்படுத்தும் அவசரம் அவசியம் கருதியும், சென்னை உயர்நிதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.O. செல்வம் அவர்களுக்கான வழக்கு கட்டணம் ரூபாய் 4,40,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் ) மேற்படி செலவினத்தை அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். பல வருடங்கள் நிலுவையில் இருந்ததால் இழப்பை தவிர்க்க சிறப்பு மூத்த வழக்கறிஞர் Service Panel Counsel வைத்து வாதாடியதால் சிறப்பினமாக கருதி மேற்படி தொகையை வழங்கலாம்.

(ந.க.எண்.0924/ 2004/அ1, நாள்.09.09.2019)

090. நகராட்சி பகுதிகளில் வைக்கப்படும் விளம்பர பலகைகள் அனுமதித்தல் சம்மந்தமாக "தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளில் விளம்பர பலகைகளுக்கு விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003" என்ற விதிகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும் விளம்பர பலகைள் நிர்வகித்தல் சம்மந்தமாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920-ல் புதிய சட்டப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு இவையும் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது கீழ்கண்ட அரசாணைகள் மூலம் சட்டம் மற்றும் விதிகளில் திருத்தம் செய்து அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

அ) மேற்கண்ட பொருள் சம்மந்தமான கீழ்காணும் அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. அரசாணை எண்.(4D) 2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:05.06.2018.
2. அரசாணை எண்.15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:30.01.2019.
3. அரசாணை எண்.17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:31.01.2019.

ஆ) மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்திருத்த அரசாணைகளில் பிரதானமாக கீழ்கண்ட சட்ட விதிகளில் திருத்தங்கள் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1. நகராட்சி பகுதிகளுக்கு பொறுத்த மட்டில் விண்ணப்ப கட்டணம் ரூ.1000/- நிர்ணயித்துள்ளது
2. விளம்பர வரி என்ற வாசகத்தினை விளம்பர பலகை உரிமக் கட்டணம் என மாற்றி அமைத்துள்ளது

இதன்படிக்கு நகராட்சி பகுதிகளுக்கு பொறுத்த மட்டில் (3 ஆண்டிற்கு) உரிமக் கட்டணம்

1) பிரதான மற்றும் பேருந்து தடச் சாலைகளில் - 1 ச.மீ க்கு ரூ.6000/-
2) மற்ற சாலைகளில் - 1 ச.மீ க்கு ரூ.4000/-

3. வருடாந்திர வாடகை இந்நகராட்சி பொறுத்த மட்டில் பிரதான சாலையில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.400/- இதர சாலைகளில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.300/-
4. விளம்பர பலகைகள் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் / இடங்களில் மட்டுமே அனுமதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
5. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 285 ( I ) - ல் உள்ள தண்டணைக் கட்டணம் ரூ.10000/- உள்ளதை உயர்த்தி ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
6. மேற்கூறிய அனைத்துக் கட்டணங்களும் நகராட்சியில் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவற்றின்படிக்கு இந்நகராட்சி பகுதிக்குள் இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம்/இடங்களில் விளம்பர பலகைகள் வைக்க அனுமதி கோரும் தேர்வுகளில் கீழ்கண்ட விகித அடிப்படையில் வருடாந்திர வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

1. பிரதான சாலையில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.400/-
2. இதர சாலைகளில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.300/-

அலுவலக குறிப்பு :

1. நகராட்சியின் வருமானத்தினை பெருக்கிடும் நோக்கத்துடன் மேற்குறிப்பிட்டள்ள சட்ட விதிகள் திருத்தம் பிறப்பிக்கப்பட்டுள்ளதை கருதி மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. ஏற்கனவே மேற்படி விதிகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படும் அடிப்படையிலும், விளம்பர பலகைள் அனுமதிக்ககும் தருணங்களில் நகராட்சி பொறியியல் பிரிவில் அன்றைய தேதியில் அனுமதி அளிக்கும் கட்டிடத்தின் நிலைப்புறுதி குறித்த கருத்தினை பெற்று நகராட்சி கட்டிடத்திற்கு அனுமதி பெறும் நபர்கள் எவ்வித சேதமும் விளைவிக்கக் கூடாது என்ற நிபந்தனைகளுடன் இந்நகராட்சி சொந்தமான கட்டிடங்களின் மீது விளம்பர பலகைகள் வைக்க அனுமதி வழங்குவதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

தீர்மானம் எண்.090, நாள்: 04.09.2019

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

(ந.க.எண்.923/2019/நஅ)

091. வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான எச்சூர் உரக்கிடங்கில் குப்பைகளை சேகரமாக்கும் Dumping Site –ஐ ,திருவண்ணாமலை மாவட்ட மாசுகட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் மேற்படி இடத்தினை கள ஆய்வு மேற்கொள்ள ஆய்வு கட்டணம் ரூ.3710.00 செலுத்திட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1065/ 2019/இ1, நாள்.06.09.2019)

092. வந்தவாசி நகராட்சிக்குச் சொந்தமான எச்சூர் குப்பைகிடங்கு வந்தவாசி நகராட்சி குப்பை அள்ளும் பொது சுகாதார வாகனங்கள் மூலம் குப்பைகளை கொட்டுவதற்கு வாகனம் செல்ல வழியில்லாமல் குவித்து கிடக்கும் குப்பைமேடுகள் JCB இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தி ஒழுங்குபடுத்த மேலும் குப்பைகளை கொட்டுவதற்கு வசதியாக இடம் காலி செய்து தருதல் பணிக்காக அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி சட்டம்–1920ன்படி பிரிவு–15 கீழ் 03.07.2019ல் விலைப்புள்ளி கோரியதில் 08.07.2019 வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| விபரம் | | |
|---|---|---|
| வ.எண். | விலைப்புள்ளிதாரர் விபரம் | JCB எரிபொருள் ஆள்கூலி, இதரசெலவு உள்பட 1 மணி நேரம் JCB வாடகை. |
| 1. | திரு.முருகேசன், ஒப்பந்ததாரர் | ரூ.1025.00 |
| 2. | திரு.வி.சுந்தரம், ஒப்பந்தாரர் | ரூ.1000.00 |
| 3. | திரு.ஆர்.கோவிந்தன், ஒப்பந்ததாரர் | ரூ. 950.00 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள 3 விலைப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.950.00 என விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.கோவிந்தன், ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டதையும் திரு.ஆர்.கோவிந்தன், ஒப்பந்ததாருக்கு பணி உத்திரவு வழங்கியதையும், செலவுத்தொகை ரூ.45,885/– தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 1038 /2019/எச்1., நாள்.26.07.2019)

093. வந்தவாசி நகராட்சியில் தெருவிளக்குகள் பராமரிப்புக்காக வார்டு எண்.1,2,6,3 மற்றும் 18 ஆகிய வார்டுகளில் தெருவிளக்கு பராமரிப்புக்காக தெருவிளக்கு உபகரணங்கள் சப்ளை செய்த வகையில் தொகை வழங்கிட ரூ.1,20,000/–க்கு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கப்படுகிறது.
2. அவசரம் அவசியம் கருதி இந்நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செலவினம் ரூ.1,19,484/– வழங்கியது மன்றம் பதிவு செய்யலாம்.

094. வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான எச்சூர் உரக்கிடங்கின் அருகில் சாய்பாபா திருக்கோயிலின் அருகில் உள்ள கைபம்பு ஆழ்துளை கிணற்றின் நீரை பரிசோதனை செய்ய கட்டணம் ரூ.3710.00 செலுத்திட திருவண்ணாமலை மாவட்ட மாசுகட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் என்ற முகவரிக்கு வங்கி உண்டியல் எடுத்தமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1186/ 2019/இ1, நாள்.06.09.2019)

**095.** வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டிற்கு, தேர்தல் பயன்பாட்டிற்கு எழுத்தர்களின் இருக்கைக்கு 4 (நான்கு) பீரோக்கள் சப்ளை செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.60,000/—ம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் பதிவு செய்தல்.
2. அவசரம் அவசியம் கருதி தேர்தல் பிரிவு எழுத்தர்களுக்கு 4 பீரோக்கள் சப்ளை செய்த வகையில் தோராய செலவினம் ரூ.60,000/— மன்றம் ஒப்புதல் வழங்குதல்.

(ந.க.எண். /2019/எச்1., நாள்.23.09.2019)

**096.** வந்தவாசி நகராட்சியின் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி தேர்தல் ஆவணங்களை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு (டிரான்ஸ்போர்ட் மினிலாரி சர்வீஸ்) மூலம் எடுத்து வருவதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.45,000/— மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளித்தல்.
2. தேர்தல் அவசரம் கருதி கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் லாரி மூலம் எடுத்து வர செலவினம் ரூ.45,000/—க்கு மன்றம் ஒப்புதல் அளித்தல்

(ந.க.எண்.1564 /2019/இ1., நாள்.23.09.2019)

**097.** திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ளாட்சி தேர்தல் பணி குறித்த EVM மிஷின் பழுது பார்ப்பு பணி நடைபெற்று வருவதால் அப்பணிக்கு உதவிட வந்தவாசி நகராட்சியில் இருந்து நாள் ஒன்றுக்கு 10 நபர் வீதம் 4 (நான்கு) நாட்களுக்கு வந்தவாசியில் இருந்து திருவண்ணாமலைக்கு அழைத்து சென்றுவர ஆகும் செலவினத்திற்கும் இதர தேர்தல் செலவினத்திற்கும் Section 15ன் கீழ் அவசரம் அவசியம் கருதி திரு.பெ.சிவக்குமார், இளநிலை உதவியாளர் என்பவருக்கு ரூ.9,200/— தேர்தல் பணி முன்பணம் வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கப்படுகிறது.
2. தேர்தல் அவசரம் அவசியம் கருதி Section 15ன் கீழ் தேர்தல்பணி நடைபெற ரூ. 9,200/— வழங்கியது மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க.எண்.1015 /2019/இ1., நாள்.24.09.2019)

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி